# மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம்களின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கு: யாழ் மாநகர பகுதியை மையமாக கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**பௌவுஸ்தீன் பமீஸ்**

சமூகவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்
fawsfamees1@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை முஸ்லிம் சமகால கல்வி நிலையினையும் எதிர் கொள்ளப்படும் சவால்களை மையமாக கொண்டதாக ஆய்வுக் கட்டுரை உள்ளது. இது யாழ் மாவட்டத்தினை விசேடமாக குவிமையப்படுத்துகின்றது.1990 ம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் இரண்டு தசாப்பதத்தின் பின்னர் மீள்குடியேறியுள்ள இச்சூழலில் சமூக பொருளாதார மற்றும் உள ரீதியாக பல்வேறு சவால்களை எதிர் கொள்ளுகின்றனர்.குறிப்பாக கல்வி நிலையில் இவை பாரியளவு தாக்கம் செலுத்துகின்றன.யாழ் மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகளான உஸ்மானிய்யா கல்லூரி, கதீஜா பெண்கள் கல்லூரி போன்றவற்றில் கல்வி பயில்கின்றனர்.யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள முஸ்லிம்களின் வதிவிடங்ளும் பாடசாலைகளும் நகரின் ஏனைய பகுதிகள் போல வளர்ச்சியடையாமை கவனிக்கத்தக்கது.ஆய்வானது வினாக்கொத்து மற்றும் நேர்காணல் போன்ற முறைகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளும் சேகரிக்கப்பட்டு பெறப்பட்ட தரவுகளானது கணனி மூலம் குறிப்பாக Excel Package மூலமும், எளியபுள்ளிவிபரவியல் முறை மூலமும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின் முடிவுகளின்படி குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் குறைந்த வருமானத்தினையுடைய தொழில்களில் ஈடுபடுகின்றமை,வதிவிட சார்ந்த பிரச்சினைகள்(வீடின்மை,நிரந்த வீடின்மை, அடிப்படை வசதிகளீன்மை), சமூக பங்கேற்பின்மை, வாழ்வாதாரத்திற்கான வாய்ப்பின்மை போன்ற பல சமூக பொருளாதார பிரச்சினைகள் இனம்காணப்பட்டதுடன் கல்வியில் பாடசாலை கற்பித்தலில் துணை சாதனங்கள் வளங்கள் போதுமானதாக இல்லாமை,பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையிலான இடைத்தொடர்பு குறைவாக காணப்படுகின்றமை,கற்பதற்கான வீட்டுச் சூழல் மற்றும் அடிப்படை வசதிகள் இன்மை,கல்வித் தேவைகளினை நிறைவேற்றப்படாமை மற்றும் ஏனைய பல பிரச்சினைகள் வகிபங்கினை ஆற்றுகின்றமை ஆய்வின் மூலம் கண்டறியப்படுள்ளது.

பெற்றோரினை ஊக்கப்படுத்தல் பாடசாலையுடனான இடைவினையை அதிகரித்தல்,வீட்டுத்திட்டத்தினை விரைவாக முன்னெடுத்தல்,கல்விற்கான புலமைபரிசில், நிதி மற்றும் கடன் உதவித்திட்டங்களி முன்னெடுத்தல்,பாடசாலைக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொடுத்தல்,கற்றலுக்கு பொருத்தமான வீட்டுச் சூழல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதுதல், அரச மற்றும் அரசசார்பற்ற மூலம் உதவித்திட்டங்களை முன்னெடுத்தல் , பெண்கள் சார்ந்த தொழில்களை ஏற்படுத்துதல்,போன்றன எடுத்தியம்பும் தீர்வுகளாகவுள்ளன.

**திறவுச் சொற்கள்:** மீள்குடியேற்றம், முஸ்லிம்கள்,கல்வி , பொருளாதாரம் ,வகிபங்கு

## 1.ஆய்வின் அறிமுகம்

இறைவேதமாகிய குர்ஆனின் முதல் ஐந்துவசனங்களும் கல்வியினை முக்கியத்துவத்தினை எடுத்தியம்பியதாக ஆரம்பிப்பதுடன் முதல் போராகவும் சத்தியத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான யுத்தமாக விளங்கிய பத்ர் யுத்தத்தின் போது பிடிபட்ட சிறைக் கைதிகளில் கற்றவர்களை கொண்டு கல்விற்காக மூலதனமிட்டமை வரலாற்று சான்றாகும். இத்தகைய பின்புலத்தில் இலங்கையில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் திகழ்வதுடன் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பல முக்கிய அறிவுப் பொக்கிசங்களை அறுவடை செய்த பூமியுமாகும்.

இந்த அடிப்படையில் கல்வியானது நிகழ்கால சமூகத்தினால் கடந்த சமூகத்திலிருந்து கிடைந்த சமூகத்திலிருந்து கிடைத்த அறிவினை எதிர்கால சந்ததிற்கு கையளிக்கின்ற பிரதான கருவியாகும்.எனவே இலங்கை முப்தசாப்த யுத்தித்தின் முக்கியமாக முஸ்லிம்களை பாதித்த சம்பவமாக 1990ம் ஆண்டு 24 மணித்தியாலத்தில் வடக்கில் இருந்த முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றியமையாகும். இது பாரிய சமூக பொருளாதார கட்டமைப்பில் பாரிய தாக்கத்தினை செலுத்தியதுடன் ஈடு செய்ய முடியாத இழப்பாக கல்வி இருந்தது.எனவே இன்று போர் ஒய்ந்த சூழலில் மீள்குடியேறி வருகின்ற யாழ் முஸ்லிம்கள் சமூகப் பொருளாதார நிலையானது மிக அடிமட்ட நிலையில் உள்ளதுடன் கல்வி நிலையிலும் இதன் தாக்கம் ஆழ வேறுன்றியுள்ளது.

ஆகவே மீள்குடியமர்தல் பற்றி றெவின்ஸ்ரைன் என்ற ஆய்வாளன் குறிப்பிடும் போது உயிர் கூற்றியல் காரணிகளான கரு வளம்,இறப்பு சமூக பொருளாதார அரசியல் பாண்பாட்டு காரணிகளில் உந்தப்படும் மனிதனின் இயக்கமே என்கின்றார்.கல்வியானது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு அறிவுதிறன் ,மனப்பாங்கு,ஆற்றல்கள் ,பழக்க வழக்கங்கள் மற்றும் பண்பாட்டு அம்சங்களை கையளிக்கின்ற பாரிய பணியை செய்கின்றதன் அடிப்படையில் மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம்களின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கினை ஆராய்தல் காலத்தின் தேவையும் இன்றியமையாததுமாகும். போர் முடிவடைந்து ஒரு தசாப்மாகவுள்ள இச்சூழலில் இன்னும் நிலையான சமூக பொருளாதார முறைமை ஏற்படுத்தப்படாமை ஆய்வினை மேற்கொள்ள துாண்டுதலாக அமைகின்றது

ஆகவே கல்வியானது எதிர்காலத்திற்கான முதலீடாகவும் இதனுடாக தனியங்களும் சமூகமும் நன்மையவதுடன் மனிதனின் திறமையையும் குறிப்பாக மனதினை வளர்க்கின்ற செயற்பாங்கு எனவும் இதனூடாக சீரிய உண்மை ,அழகு போன்ற நற்குணங்களில் கற்பனையை அனுபவிப்பதாகும்.(.அரிஸ்டேடில்) ஆகவே நவீன உலகின் ஆற்றல்களை வழங்குகின்ற ஒரு கருவி என்ற அடிப்படையில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.மேலும் நாட்டின் நிலைபெறுகு அபிவிருத்திக்கு உந்து சக்தியாக கல்வியே திகழ்கின்றது. கல்வியானது சமூக நீதியை போன்று பொருளாதார அபிவிருத்தியினதும் புதுமுகமாக என்பதிற்கு(கெவின் றட்) அமைய கட்டாயக் கல்வியான பாடசாலைக் கல்வியில் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சமூகப் பொருளாதார சார்ந்தாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வறுமை மற்றும் இதர சமூக பிரச்சினைகளின் காரணமாக கல்வி கற்பதற்கு இயலாமல் உள்ளது. குறிப்பாக வறுமை கோரப்பிடியினால் அனைத்து உரிமைகளும் இழக்கின்ற சமூகத்தில் கல்வி முன்னுரிமைப்படுத்தபட வேண்டிய கட்டாய உள்ளமையை யாருமே மறுதலிக்க முடியாது.ஆகவே இலங்கையின் ஆரம்பக் கட்டாயக் கல்வி 1939ம் ஆண்டு கல்விச் சட்டத்தினுடாக 5-14 வயதுக்குப்பட்டிருந்தவர்கள் கொண்டிந்ததுடன் தற்போது கட்டாயக் கல்வி 5-16 வயது வரையாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

***26 வருடங்களுக்கு(1983–2009) மேல் யுத்தத்தினால் இடப்பெயர்ந்து அகதிமுகாம்களில் வசித்து வந்த யாழ் முஸ்லிம்கள் யுத்தம் முடிவுற்றதன் பின்னரான மீள்குடியேறிய சூழலில் அவர்கள் எதிர் கொள்ளும் சமூக பொருளாதார பிரச்சினைகளானது பௌதிக குறைபாடு,மனித மூலதன பிரச்சினைகள்; சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் பிரச்சினைகள், தொடர் வறுமை,உட்கட்டமைப்பு வசதிகளின்மை , மீண்டும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டி மீள் கட்டமைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை என்பவற்றினை அடிப்படையாக கொண்டிருப்பது. இடம்பெயர்ந்து***

*மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமரும் போது அடிப்படை வசதிகள் ,சுகாதாரம், போக்குவரத்து ,தொழில் வாய்ப்பு மற்றும் புதிய தொழிலுலை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்த நிலை ,சமூக ஒழுங்கினைப்பு இதனுடன் இணைந்ததாக (தொடர்பான) பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. ஆகவே இவை கல்வியில் தாக்கம் செலுத்துவதாக உள்ளது குறித்த பிரச்சினைக்கான தீர்வினை நோக்கி செயன்முறை இன்றியமையாதது.* இந்த அடிப்படையில் கட்டாயக் கல்விப் காலப்பகுதியில் யாழில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதாரகாரணிகளின் வகிபங்கு ஆராய்வதினை மையமாக கொண்டதாக ஆய்வு அறிமுகமுள்ளது.

## 2.ஆய்வு நோக்கம்

### 2.1 பொதுநோக்கம்

யாழ் மாவட்ட முஸ்லீம் பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி ஈடுபாடு மற்றும் அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் சமூக பொருளாதார காரணிகளை கண்டறிவதுடன் அவை எந்தளவிற்கு தாக்க விளைவுகளை ஏற்படுகின்றன என்பதனை கண்டறிதல்

### 2.2 சிறப்புநோக்கங்கள்:

- ❖ கல்வி செயற்பாடுகளின் போது செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகளை இனம் காணுதல்
- ❖ கல்வி செயற்பாடுகளின் போது செல்வாக்குச் செலுத்தும் பொருளாதார காரணிகளை இனங்காணுதல்
- ❖ வீட்டு வசதி மற்றும் அதன் சூழல் கல்வியின் மீது எவ்வாறான செல்வாக்கு செலுத்துகின்றது என்பதினை இனம் காணுதல்
- ❖ சமூக,பொருளாதார காரணிகள் மேம்பாடின் மூலம் கல்வியை முன்னேற்றத்தினை நோக்கி திட்டங்களை வகுத்தல்.

### 2.3 ஆய்வு வினாக்கள்

''யாழ் மாவட்ட முஸ்லீம் கல்விநிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கு''எனும் ஆய்விற்கு பின்வருவன ஆய்வு வினாக்களாக அமைந்தன.

- ❖ யாழ் மாவட்டத்தின் முஸ்லீம்களில் கல்வி நிலையில் என்னென்ன சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன?
- ❖ கல்வி மீது பெற்றோரின் ஆதரவுத் தன்மை எவ்வாறு உள்ளது?
- ❖ வறுமை கல்வியில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது?
- ❖ குடும்ப சூழல் வீட்டுவசதிகள் கல்வியில் எவ்வாறான தாக்கங்களை செலுத்துகின்றது?
- ❖ யாழ் மாவட்டத்தின் முஸ்லீம்களின் கல்வி முன்னேற்றத்தில் எவ்வாறான சமூக, பொருளாதார திட்டங்களை வகுக்க முடியும்?

## 4.ஆய்வுப் பிரச்சினை

எந்தவொரு பிரச்சினை மக்களால் அதிகமாக பிரச்சினையாக நோக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலும் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகளை தேடும் சந்தர்ப்பத்திலும் தான் அது ஆய்வுப் பிரச்சினையாக மாறுகின்றது.இதனடிப்படையில் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுகிறது. வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் அதிக தொகையான முஸ்லிம்கள் மக்கள் வசித்து வந்த இடங்களாக மன்னார் மாவட்டத்தின் முசலி' எருக்கலம்பிட்டி பிரதேசங்களும் யாழ்ப்பாண பிரதேச செயலப் பிரிவின் ஐந்து சந்தி (சேனகர் தெரு) பகுதியாகவும் உள்ளது.

இந்த அடிப்படையில் இன்றைய சூழலில் அதிகமான வாழ்வாதாரம் பிரச்சினைகள் யாழில் மீள்குடியேறிய முஸ்லிம்கள் பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் எதிர் கொள்ளுகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று இவர்களின் குறிப்பிட்ட பிரச்சினைகளின் காரணமாக பாரிய மன உழைச்சலுக்கு உள்ளாகின்றனர்.. மேலும் வாழ்வாதாரம் என்பது சுய தேவைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு மூலமாகும். மேலும் நிலைத்து நீடித்து நிற்கத்தகு வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும். இயற்கை,சமூக,பௌதீக,மானிட ,நிதி ,மூலதனம் ஆகிய சொத்துக்களில் தங்கியுள்ளது.(கிரிஸான்டா**2008**).ஆகவே கல்வியின் ஈடுபாட்டில் தாக்கம் செலுத்தும் சமூக பொருளாதார காரணிகளை கண்டறிவதுடன் இப்பரச்சினைகளை தீர்ப்பதன் மூலமாகத்தான் கல்வி முன்னேற்றமடைதலுக்கான அடித்தளத்தளமாக அமையும்

பொருளாதார ரீதியாக பெற்றோர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் சில்லறை வியாபாரம், இரும்பு வியாபரம், சுயதொழில் நடவடிக்கை , கூலி வேலை, இறைச்சி கடை, தையல் கடை, நடைபாதை வியாபாரம், வர்த்தகம், தரகர் , மிகச் குறைந்தவிளான அரச ஊழியத் தொழில் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். ஆகவே மிகக் குறைந்த வருமானம் மந்தகரமாள பொருளாதார நிலை தொழிலின் மீது அதிக நேரத்தினை செலவிடல் போட்டி நிலை போன்றன கல்வி ரிதியான நிலையில் செல்வாக்குச் செலுத்துகின்ற பொருளாதாரக் காரணிகளில் முக்கியம் பெறுகின்றதன் அடிப்படையில் ஆய்வுப்பிரச்சினை உள்ளது.

விஷேடமாக மீள்குடியேறிய மற்றும் மீள்குடியேறி வருகின்ற இச்சூழலில் சொந்த இடங்களில் அல்லது புதிய இடங்களிக்கு செல்லுகின்ற போது பல்வேறு வகையான பிரச்சினைகனளை எதிர் கொள்ளுகின்றமை தவிர்க்க இயலாதது இந்த அடிப்படையில் அன்றாட வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினை முக்கிய இடத்தினை வகிக்கின்றது.பொதுவாக குறித்த ஒரு சமூகத்தில் தொழிலை அடிப்படையாக கொண்டு சமூக நிலை அமைவதுடன் கல்வியில் அதன் செல்வாக்கு வேருன்றியுள்ளமையை கண்கூடு. தனது சூழ்நிலைக்கு ஏற்ப தொழிலில் ஈடுபட முடியாத திறன்கள் சார்ந்த குறைபாடு என்பன செல்வாக்கு செலுத்துகின்றது.

மட்டுமன்றி சமூக மற்றும் பொருளாதார நிலையானது யாழ்ப்பாணத்தின் நகரின் ஏனைய பகுதிகள் வளர்ச்சியடைந்த அளவிற்கு இப்பகுதி வளர்ச்சி அடையாமை கல்வி நிலையில் வகிபங்காற்றுகின்றமை அவதானிக்கத்தக்கது.

ஆகவே கல்வி என்பது அடிப்படை உரிமையாகும்.இது மறுக்கப்படும் போது ஏனைய அனைத்து உரிமைகளும் இல்லாமல் செய்தற்கு சமனாகும் அகதி முகாம் சூழலில் ஒரு தலைமுறையினர் கல்வி உரிமையை பெற்றுக்கொள்வதில் பாரிய சவால்களினை எதிர்கொண்டதுடன் அவர்களது சமூக பொருளாதார நிலை கல்வியை பெறுவா

போர் ஓய்ந்த சூழலில் மீள்குடியேற்றயுள்ள முஸ்லிம்களது வாழ்வியலிலானது சொந்த வீடின்மை,நிரந்த வீடின்மை,அடிப்படை வசதிகளற்ற வதிவிடம்,குறைந்த வருமானம்,சேமிப்பீன்மை ,சமூக உடைவு, போதைப் பொருள் பாவனை, சமூகத் தொடர்புகளில் பற்றாக்குறை , அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுதல்இ உட்கட்டமைப்பு வசதிகளீன்மை போன்ற சமூகப் பொருளாதார காரணிகள் கல்வி நிலையில் தாக்கம் செலுத்துவதாக உள்ளதுடன் இற்றை வரைக்கும் போதிய செயத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

பாடசாலை கற்பித்தலில் துணை சாதனங்கள் வளங்கள் போதுமானதாக இல்லாமை,பெற்றேருக்கும் பாடசாலைக்கும் இடையிலான இடைத்தொடர்பு குறைவாக காணப்படுகின்றமை,கற்பதற்கான வீட்டுச் சூழல் மற்றும் இடவசதி அதனுடன் இணைந்த மின்சாரம் ,குடிநீர் மற்றும் மலசல கூடம் போன்ற அடிப்படை வசதிகள் இன்மை கற்றலில் போது சவால்களாக உள்ளமை பிரச்சினைகள் இந்த ஆய்வினை மேற் கொள்வதற்து தூண்டுதலாக அமைந்துள்ளது

**4.ஆய்வு முறையியல்**

**4.1ஆய்வுப் பின்புலமும் ஆய்வுப் பிரதேசமும்**

இலங்கை முஸ்லீம்களின் ஆரம்பக் குடியேற்றங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது (அலெக்ஸாண்டர் ஜேன்ஸன்) மேலும் இலங்கை முஸ்லிம்களின் முதற் குடியேற்றமாக யாழ்ப்பாணம் இருப்பதனால் தான் தமிழ் மொழி தாய் மொழியாகின்றது. என்று குறிப்பிடுவதுடன் இப்னுதூதா 1344 ல் யாழ்ப்பாண மன்னனான ஆரியச் சக்கரவர்த்தியுடன் மிகச் சிறந்த தொடர்பான பேணியுள்ளமையும் வரலாற்று சான்றாகும்.

இந்த அடிப்படையில் 1990ம் ஆண்டு பலவந்த வெளியேற்றம் காரணமாக நாட்டில் வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்ததுடன் 2002ம் ஆண்டு சமாதானக் காலப் பகுதியிலும் 2009ம் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னரும் மீள்குடியேற ஆரம்பித்தனர்.அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் முஸ்லீம்களின் மீள் குடியேற்றமானது யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவின் அதிகமானவர்களினை உள்ளடக்கிய கல்வியை வழங்கும் இரண்டு பாடசாலைகளாக உஸ்மானிப்பாய் கல்லூரி,கதீஜா பெண்கள் கல்லூரி என்பன திகழ்கின்றன.

யாழ்ப்பாண முஸ்லீம்கள் தொடர்ச்சியாக சமூகப் பொருளாதார ரீதியாக பல்வேறுப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றதுடன் இதனால் கல்வி நிலையில் தாக்கம் செலுத்துகின்றது.ஆகவே கல்வியை மையமாக கொண்டு சமூகத்தின் மேம்பாட்டு சமூக பொருளாதார ரீதியான வகிபங்கினை அதிகரிக்க செய்யவும் பொருட்டும் மீள்குடியேற்றியவர்களின் மாணவர்களின் கல்வி உரிமையை உறுதிசெய்யும் வகையிலும் அதற்கான திட்டங்களை முன்மொழியும் வகையிலும் ஆய்வுப் பின்புலம் அமைகின்றது.

**4.2 தரவு சேகரிப்பு நுட்பங்கள்**

இந்த ஆய்வு தொடர்பான தரவுப் பகுப்பாய்வு தேவையான தரவுகள் முதலாம் நிலை தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. முதன்மை தரவுகளாக மாணவர்களிடம் வினாக்கொத்து மூலமும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் நேர்காணல் போன்ற நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக இந்த ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் ',uz;lhk; epiyj;juTfshf Ma;Tg; gpuNjrk; njhlu;ghd E}y;fs;,Gs;sptpguf; ifNaLfs;> khtl;l Gs;sptpguf; ifNaL;>gj;jpupiffs;> rQ;rpiffs;> என்பவற்றிலிருந்து தகவல்கள் திரப்பட்டப்பட்டன.

**4.3மாதிரி எடுப்பு**

. மொத்த மாணவர் தொகையில் இருந்து அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர் தெரிவானது எழுமாறாக மாதிரி எடுப்பு முறையில் நடைபெற்றது. இரண்டு பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தரவுகள் பெறப்பட்டுள்ளன.இரண்டாம் நிலைக் கல்வி பயிலும் உஸ்மானிய்யா கல்லூரி 150 மாணவர்களில் 36 பேரும் மற்றும் கதீஜா பெண்கள் கல்லூரி 110 மாணவிகளில் 24 பேருமாக வகுப்புக்களின் சம அளவு பிரதிநிதித்துவடாக 60 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் பத்து நேர்காணல்கள் பெற்றோர்கள் ஆசிரியவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. இந்த அடிப்படையில் மேற்குறிப்பிட்ட இரண்டு பாடசாலைகளையும் மையமாகக மையமாகக் கொண்டும் Neub mtjhdk;> Ngl;bfhzy;>Kiwfs; %yKk; juTfs;Nrfupf;fg;gl;Ls;sd.vspa Gs;sptpguKiw %yKk; juTfs;> gFg;gha;tpw;F cl;gLj;jg;gl;L KbTfs; ml;ltizfshfTk;> tiuglq;fshfTk; ngwg;gl;L tpsf;fq;fs; nfhLf;fg;gl;Ls;sd.

**4.4 தரவுகளும் பகுப்பாய்வு முறைகளும்**

.இவ் ஆய்வுவானது அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான இணைந்த தரவுகளை உள்ளடக்கி உள்ளது. மேலும் ஆய்வு தொடர்பான தரவு திரட்டப்பட்ட விபரம் தரவுகன் பகுப்பாய்வு செய்யப்பட்ட முறை மற்றும்

பெறப்பட்ட விதம் தரவுகளை அடிப்படையாக கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட முறை மற்றும் பெறப்பட்ட ஆய்வுக் காலத்திற்குள் சேகரிக்கப்பட்ட அனைத்து தரவுகளும் தொகுத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இம்முன்வைத்தலானது சமூக**,**பொருளாதார பிரச்சினைகளை விவரண முறை மற்றும் தர்க்கபகுப்பாய்வு என்பவற்றினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது ***பண்புசார்,அளவுசார் நுட்பங்களைப் பயன்படுத்தி தரவுப்பகுப்பாய்வானது புள்ளிவிபரவியல், விபரணம், வரைபு போன்றவற்றின் மூலம் தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.***

**5. இலக்கிய மீளாய்வு**

**நிப்ராஸ்.எம்.எம்.(2016).<u>மீள்குடியேற்றப்பட்ட முஸ்லீம்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளும் மீள்கட்டுமான செயற்பாடுகளு</u>ம், சமூகவியல் துறை,யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றப்பட்ட முஸ்லீம்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளினை வெளிக்கொணர்வதுடன் 56 குடும்பங்கள் எழுமாதிரி எடுப்பின் ஊடாக தெரிவு செய்**யப்**பட்டு பயன்படுத்தப்பட்டது. ஆய்வானது சமூக பொருளாதார சவால்களை மையமாகக் கொண்டு அமைவதுடன் குறிப்பாக பொருளாதார குறைபாடு பாரபட்சம் காட்டப்படுதல், கல்விசார் பிரச்சினை,சொந்தமான வீடற்ற நிலை என்பன பிரச்சினைகளினை குவிமையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது.

**ஹஸ்புல்லா'.எஸ்.சைபுதின்.என்.பீ.எம்.(2000).<u>இலங்கை முஸ்லிம் உயர்கல்வி</u>,முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, கொழும்பு-6**

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை முஸ்லீம்களுடைய கல்வி ரீதியாக சவால்களையும் குறிப்பாக உயர்கல்வி பெண்களுடைய கல்வியை மையமாகக் கொண்டதாகவும் கல்வியில் சமூக,பொருளாதார கலாசார ரீதியான தாக்கத்தினையும் ஆராய்வதன் வழி ஆய்வுக்கு திசை வழிகாட்டியாக அமைகின்றது.

**சந்திரசேகரன்.சோ,சின்னத்தம்பி.மா.(2002).<u>மனித வள மேம்பாட்டிற்காக கல்வி.</u>லங்கா புத்தகசாலை, கொழும்பு-12**
மனித வள மேம்பாட்டிற்காக கல்வியின் அவசியப்படும் அதில் தாக்கம் செலுத்துகின்ற சமூக பொருளாதார காரணிகளை ஆராய்வதுடன் வளர்முக நாடுகளையும் வளர்ச்சியடைந்த நாடுகளையும் ஒப்பிட்டு நோக்குதாக உள்ளது.

**Balasundaram.s(2013).<u>challenges encountered by schools in Impleementing compusary education ,</u>Third International Symposium. South Eastern University of Sri Lanka Oluvil. Third International Symposium,page 13-21**

கல்வியின் மூலம் நாட்டின் மேம்பாட்டிற்கான வளங்களை ஏற்படுத்துவதனை பற்றி ஆராய்கின்றது. கட்டாயக் கல்வியின் அவசியத்தினையும் அதன் போதனை சவால்களையும் சமூக பொருளாதார ரீதியாக கல்வியுடன் தொடர்புடைய காரணிகளான பாடசாலை இடைவிலகல், வரவீன்மை, பாடசாலை கற்பித்தல் வளங்களின்மை ,பெற்றோரின் கல்வி மீதான அக்கறை என்பவற்றினை குறிப்பீடுகின்றார்.

**முத்துலிங்கம்.ச (1980), <u>கல்வி உளவியல்</u>, ஆசிர்வத அச்சகம்**, யாழ்ப்பாணம்

கல்வி உளவியல் கற்றலும் கற்பித்தலும் அதாவது கற்பித்தல் செயன்முறையின் போது செல்வாக்குச் செலுத்தும் உள,சமூக சூழலியில் காரணிகளையும் வினைத்திறனான கற்றலுக்கான வழிமுறைகளையும் குறிப்பிடுகின்றார்.

**Theneshi&Uthayakumar,s,s(2011),<u>வடமராட்சி பிரதேசத்தின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கு,</u> fouth International Symposium,SEUSL,.239-245**

ஆய்வானது வடமராட்சிப் பிரதேசத்தில் கல்வியில் சமூக பொருளாதார காரணி வகிபங்கு பற்றியதாக ஆய்வு அமைகின்றது. ஆய்வுப் பொருட்டு பாடசாலை வரவு ஒழுங்கு ,தாய் தந்தையரின் கல்விமட்டம், பெற்றோர் கொண்டுள்ள ஆர்வம்,கற்பதற்கான சூழல் என்பவற்றினை மையமாகக் கொண்டு ஆராய்வதாக உள்ளது.

**அப்துர்ரஹீம்.எஸ்.எம்(1979),<u>யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்,</u> நாமகல் பதிப்பகம்**

இப்பகுப்பாய்வு யாழ்ப்பாண முஸ்லீம்கள் தொடர்பாக விளங்கிக் கொள்வதற்கும் அவர்களுடைய கல்வி,கலாசார,பண்பாட்டு தொடர்பு என்பவற்றினை அறிய வழி ஆய்வுக்கு திசை வழி காட்டுகின்றது.

**Hasbullah S.H, (2015)<u>Twenty five years of suffering Ensaring Northen Muslim Resettement</u>( unpublish)**,


இலங்கையின் யுத்தத்ததின் காரணமாக பல வந்தமாக வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லீம்கள் 25 வருடங்களின் பின்னர் மீள் குடியேற்றத்தின் போதான சவால்களினை மையமாக கொண்டதாகஆராய்கின்றது. இதில் யாழ் மாவட்ட முஸ்லீம்கள் எதிர்கொள்ளும் சவால்களாக வீட்டுத் திட்டமின்மை,வாழ்வாதாரத்திற்கான வாய்ப்பின்மை,பிள்ளைகளின் கல்வித் தேவைகளினை நிறைவேற்றப்படாமை,குறைந்த சமூக பங்கேற்பின்மை, இன முரண்பாடு நிலை போன்றவற்றினை குறிப்பிடுவதுடன் இதற்கான தீர்வுகளையும் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகளின் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிப்பு நுட்பங்கள், பகுப்பாய்வு முறைகளின் மூலமாக மாணவர்களின் கல்வி ஈடுபாடு மற்றும் அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் சமூக பொருளாதார காரணிகளை இனங்காணப்பட்டதுடன் பொருத்தமான தந்திரோபாய உபாயங்களையும் தீர்வுகளையும் முன்மொழிய முடியுமாக இருந்தது எனலாம்

**6. கலந்துரையாடல்**

**பிரதான செயற்பாடு வாழ்வாதார நிலை**

பெருளாதாரம் தொடர்பாக பகுப்பாய்வில் குறித்த மக்களின் குடித்தொகையினுடைய பிரதான செயற்பாடு மிக அவசியமானது.அந்த வகையில் யாழில் மீள்குடியேற்றப்பட முஸ்லிம்களினது பிரதான வாழ்வாதார செயற்பாடாகளாக பின்வருவன அமைகின்றது.





வரைபடம் 1: (மூலம் கள ஆய்வு)


தற்போது 28**%**வீதமானவர்கள் தையலினை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.20**%** சதவீதமானவர்கள் இரும்புத் தொழிலினை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.மேலும் சில்லறை வியாபாரம், இரும்பகம்,சுயதொழில் நடவடிக்கை


, கூலி வேலை, இறைச்சி கடை, தையல் கடை, நடைபாதை வியாபாரம், வா்த்தகம், தரகர் , மிகச் குறைந்தவிளான அரச ஊழியத் தொழில் என்பவற்றினை மேற்கொள்ளுகின்றர்.அதிகமான தொழில்கள் குறைந்த வருமான நிலையில் உள்ளமையினால் கல்வியிலும் தாக்க செலுத்தக் கூடியதாக உள்ளது.

**வீட்டின் தன்மை:-**

வசிப்பிடம் என்பது மானுட வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். இந்த அடிப்படையில் மீள் குடியேற்றப்பட்டுள்ளவர்களில் 55% வீதமானவர்கள் சொந்தமாக வீட்டினைக் கொண்டிருப்பதுடன் ஏனைய 45%வீதமானவர்கள் ஏனையவர்களின் வீட்டில் வசிக்கின்றனர். மேலும் 48%வீதமானவர்கள் தற்காலிக வீடுகளிலே வசிக்கின்றனர். ஏனவே தற்காலிகமான வீடுகளில் வசிக்கின்றவரகளது வீட்டின் வசதிகள், இட அமைவுஎன்பன மிக குறைவாகவே இருப்பதுடன் கல்விகற்பதற்கான வசதியும் சூழலும் குறைவாகவே உள்ளது. மட்டுமன்றி நிரந்தரமான வீடுகளில் வசிப்பவர்களின் வீடுகளானவை யுத்தத்தில் சேதமாக்கப்பட்டதினை ஓரளவு சீர்செய்யப்பட்டதாக இருப்பதுடன் அதுவும் போதிய வசதிகளற்றதாக வேகாணப்படுகின்றது.








வரைபடம் 2: (மூலம் கள ஆய்வு) வரைபடம் 3:(மூலம் கள ஆய்வு) வரைபடம் 4: (மூலம் கள ஆய்வு)

மேலும் சொந்த வீடுகளற்றவர்களில் 73%வீதமானவர்கள் வாடகை வீடுகளிலும், 21%வீதமானவர்கள் உறவினர் வீடுகளிலும் வசிக்கின்றனர். இவ்வாறு வசிப்பவர்கள் 10,000ற்குகுறையாத தொகையை வாடகையாகசெலுத்துவதன் காரணமாக குறைந்த வருமான நிலையினாலும்.கல்விக்கான பண ஒதுக்கீது பற்றி சிந்திக்க முடிவதில்லை


**அடிப்படை வசதிகள் கிடைப்பு தொடர்பானது:-**

மானிட அடிப்படை தேவையை நிறைவேற்றுவதற்கான வசதிகள் ஒரு வீட்டில் இன்றியமையாதது. எனவே இவற்றில் குடிநீர்,மின்சாரம்,மலசலகூடம்,கழிவுநீர் வெளியேற்றம் போன்ற வசதிகள் முக்கியமானவையாகும். எனவே ஆய்வின்படி 15%வீதமானவர்கள் குடிநீர் வசதியும், 7% வீதமானவர்கள் மலசலகூடவசதியும், 6%வீதமானவர்கள் மின்சார வசதியும் இன்றி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 25%ற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக கொட்டகையில் பள்ளிக்கு உரித்தான காணியில் பொம்மைவெளியில் வசித்து வருகின்றனர். எனவே கற்றலில் மாணவர்கள் மீதான சவால்களை ஏற்படுத்துபவையாக தொடர்ந்து காணப்படுகின்றது




. வரைபடம் 5: கற்றலில் திருப்திதன்மை

(மூலம் கள ஆய்வு)



வரைபடம் 6: (மூலம் கள ஆய்வு)

பல்வேறுபட்ட சமூக ,பொருளாதார ரீதியாக இடர்கள் காணப்பட்டாலும் கூட 94% வீதமானவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக சமூகம் அளிக்கின்றமை ஆய்வுப்படி வெளிப்படுகின்றது. மேலும் கற்றலின் போதான தேவையை நிறைவு செய்வதில் 44%வீதமானவர்கள் திருப்தியையும், 36%வீதமானவர்கள் நடுநிலையையும், 7%வீதமானவர்கள் அதிருப்தியையும் வெளியிட்டனர்.




மேற் குறித்த ஆய்வுகளின் படி கற்றல் தேவையை நிறைவு செய்தல், கற்பதற்கான வீட்டுச் சூழல்,கற்பதற்கான அயலவர்கள் ஒத்துழைப்பு ,பாடசாலை பௌதீக மற்றும் உபகரணங்கள் கிடைப்பு, நண்பர்களுடைய தொடர்பு போன்றவற்றிற்கு அதிகமானவர்களின் பதிலளிப்பானது நடுநிலை மற்றும் திருப்திதன்மை என்பதாக அமைந்திருந்தது.

எனவே மீள்குடியேறிய சமூக சூழல் மற்றும் பொருளாதார ரீதியான விடயங்களின் கல்வியில் செல்வாக்கு மற்றும் வகிபங்கினை பெறுகின்றமை ஆய்வினுடாக விளங்கிக் கொள்ள முடியுமாக உள்ளது. மேலும் பாடசாலையின் வளக் கிடைப்பு மேலும் கல்வி ரீதியான மேற்குறிப்பிட்ட விடயங்களில் பூரண திருப்தியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட

வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் கல்வி மீதான ஆர்வத்தின் வெளிப்பாடு 40% வீதமானவர்கள் ஓரளவு என்றும் 60% வீதமானவர்கள் அதிகம் எனவும் குறிப்பிட்டனர்.

பாடசாலைக்கு வருமுன் காலையிலே உணவு உண்ணாமல் 25%சமூகம் தருவதுடன் சுமார் 75 %வீதமானவர்கள் உணவு உண்பவர்களாக இருப்பதுடன் இவர்களும் குறைந்தளவிளான உணவினை உண்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் இருபது ருபாவிற்கு குறைவான பணத்தினையே பாடசாலைக்கான செலவிற்காக கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டனாமேலும் கற்றலின் போது எதிர் கொள்ளப்படும் முக்கிய சவால்களாக வறுமை, பெற்றோர்களின் ஊக்கமின்மை, பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டுதல், குடும்ப பின்புலம் கற்றலில் விருப்பமின்மை போன்றனற்றில் 40 % வறுமையை தெரிவு செய்ததுடன் 25 % வீதமானவர்கள் பெற்றோர்களது ஊக்கமீன்மையையும் தெரிவு செய்தனர்.

**8. பரிந்துரைகள்** :

- மாணவர்களுக்கு கற்றலுக்கு அத்தியவசியமான கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியை மேற் கொள்ளதல்.
- பாடசாலை காலை உணவு மற்றும் சுகாதாரம் சார்ந்த விடயங்களில் விசேட கவனம் செலுத்துதல்
- சமூக ஒழுங்கினைப்புக்கான நிகழ்ச்சித்திட்ங்களை முன்னெடுத்தல்.
- தினமும் இரவு நேரங்ளில் அன்றைய பாடசாலை பாடங்களை மீட்147வினை பெற்றோர் கவனச் செலுத்துதல்
- மீள் குடியேறியுள்ளவர்களுக்கான வீட்டுத்திட்டத்தினை விரைவாக முன்னெடுத்தல்
- மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக வேண்டி புலமை பரிசில் திட்டங்கள், நிதி உதவித்திட்டங்கள், விஷேட கடன் உதவித்திட்டங்களை முன்னெடுத்தல்
- பாடசாலைக்கு தேவையான வளங்களை மேலும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கற்றலுக்கான சூழலினையும் வசதியையும் மேம்படுத்தல்
- பெற்றோருக்கான விஷேட கருத்தரங்குகள் மற்றும் உரையாடலகள் மூலமாக மாணவர் கல்வி மீது கவனத்தினை ஏற்படுத்தல்
- பாடசாலை மாணவர்களுக்கான பொது போக்குவரத்து வசதியை ஏற்டுத்துதல்
- கற்றலுக்கு பொருத்தமான வீட்டுச் சூழல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதுடன் வீட்டுக்கு தேவையயான அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம் , மலசலகூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.
- கட்டாயக் காலப்பகுதிக்குல் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்ற மாணவர்களின் மீது கவனம் செலுத்துவதுடன் காரணிகளை இனம் கண்டு தீர்வினை பெற்றுக் கொடுத்தல்
- ஆய்வுப் பிரதேசத்தில் வேலையீன்மை மற்றும் செய்கின்ற தொழிலை மேம்படுத்துவதற்கான வசதீயீன்மை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன.ஆகவே சுய தொழில் வாய்ப்பு , ஊக்குவிப்பு கொடுப்பனவு , விஷேட கடன் உதவித்திட்டங்களை முன்னெடுத்தல் , பெண்கள் சார்ந்த தொழில்களை ஏற்படுத்துதல் போன்றன திட்டங்களின் பெற்றொரினை கல்விக்காக முதலிடுகள் பற்றி சிந்திப்பதற்கான சூழலினை உருவாக்க முடியும்.

**9. முடிவுரை**

இந்த ஆய்வானது யாழ் முஸ்லிம் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையில் சமூக பொருளாதார காரணிகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதினை ஆராய்கின்றது.இவ்வகையில் ,பெற்றோரின் தொழில் மற்றும் வருமான நிலை,கற்பதற்கான வீட்டுச் சூழல் மற்றும் அடிப்படை வசதிகள்,கல்வித் தேவைகளினை நிறைவேற்றப்படல்,உட்கட்டமைப்பு வசதி,சமூக உடைவு,போதைப்பொருள் பாவனை,சமூகத் தொடர்புகளில் பற்றாக்குறை,பாடசாலையுடனான தொடர்பு ,அதிகம் தாக்கம் புரிவது ஆய்வு ரீதியாக கண்டறியப்பட்டது.ஆகவே கடந்த இரண்டுத தசாப்தங்களாக அகதி வாழ்வினால் இழக்கப்பட்ட அளவிட முடியாத கல்விச் செல்வத்தின் இழப்பிலிருந்து மீளும் பொருட்டு மீள்குடியேறிய இச்சூழலிலாவது பரிந்துரைக்கப்பட்டவை செயற்படுத்தபடுமிடத்து சமூக பொருளாதார ரீதியில் மேம்பாட்டினை நோக்கி அசைவினை ஏற்படுத்த முடியும்.

**10. உசாத்துணைகள்**


- Ameer .A (1997) The Muslim factor in Sri Lankan ethnic crisis, Journal of Muslim Minority Affairs, 17:2, 253-267,
- Haniffa, F 2015 Competing for Victim Status: Northern Muslims and the Ironies of Sri Lanka's Post-war Transition. Stability: International Journal of Security & Development, 4(1): 21, pp. 1-18, DOI: http://dx.doi.org/10.5334/sta.fj
- Hasbullah.H. (2001). *Muslim Refugees: Forgotten People of Sri Lanka's Ethnic Conflict*. Nuraichcholai: Research and Action Forum for Social Development.
- Imtiyaz ARM & by Iqbal MCM (2011)The Displaced Northern Muslims of Sri Lanka: Special Problems and the Future Journal of Asian and African Studies© The Author(s)
- அலியார்-யு-எல்,(1995).கல்வியியல் நோக்கு.பைத்துல் றுக்மா பதிப்பகம்,சம்மாந்துறை.
- இராசநாயகம்.ஜெ.ளு(2016),கல்வித் தத்துவம்.குமரன் பதிப்பகம் ,கொழும்பு.
- உலகநாதர்நவரத்தினம்,( 2001).எல்லோருக்கும் கல்வி.ஏ-ஜே-பதிப்பகம்,கொழும்பு.
- ஜவாத்.எம்.(2009).கல்விக்கான உரிமையும் உலகளாவிய ஏற்பாடுகளும்.ஹுஸ்னா வெளியிடு,மூதூர்
- கருணாநிதி-எம்.( 2008).கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள். சேம்மடு பதிப்பகம்,கொழும்பு.
- சின்னத்தம்பி.மா.(2009).பாடசாலைகளை முகாமை செய்தல்.செம்மடு பதிப்பகம்,கொழும்பு.
- தணிசேகம்பிள்ளை.ச.நா(1998).கல்விச் சிந்தனைகள்.வட மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு,திருகோணமலை.
- பாக்கீர். ஐ.(2007).வெற்றிகரமான வகுப்பறை கற்பித்தல்.செய்ன் பதிப்பகம்,தெகிவளை.
- மஸ்தான்.எம்.எம். (2013) வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் -1990. முசலி இளைஞர் ஒன்றியம்.
- ஹஸ்புல்லா .எஸ்.எச்.(1997).இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்(தொகுதி 5),வடக்கு முஸ்லிம்களுக்கானஅமைப்பு.,கொழும்பு.